கோயம்புத்தூர் மாவட்டம்

# வேட்டைக்காரன்புதூர் ( தேர்வுநிலை) பேரூராட்சி

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பேரூராட்சி அலுவலகம்,
வேட்டைக்காரன்புதூர்

ந.க.எண். 69/2022 நாள் 08.07.2022

வேட்டைக்காரன்புதூர் (தேர்வு நிலை)பேரூராட்சியில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–2022 மற்றும் பொதுநிதி 2022–2023 கீழ் கீழ்கண்ட வேலைக்கு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 மற்றும் அவ்வப்போது அரசால் பிறப்பித்த ஆணைகளின் படி இப்பேரூராட்சியில் பதிவு செய்து 2022–23ம் நிதியாண்டிற்கு உரிமம் புதுப்பித்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து 21/07/2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை கீழே கையொப்பம் இட்டவரால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற உரிய தொகை செலுத்தி 21/072022 பிற்பகல் 3.00 மணிக்குள் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிக்கான டேவணித் தொகையை 21/07/2022 பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி உரிய இரசீதினை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 21/07/2022.பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும். இதர நிபந்தனைகளை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | டெண்டர் டேவணித் தொகை | டெண்டர் படிவ விலை |
|---|---|---|---|---|
| **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–2022** | | | | |
| 1. | வார்டு எண் 11ல் தேவிபட்டணம் சேத்துமடை ரோடு முதல் மயானம் வரை பேவர் பிளாக் அமைத்தல் | 20.00 | 40000 | 6000+ GST |
| 2. | வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6ல் கன்னியம்மன்கோவில் வீதியில் வடிகால் அமைத்தல் | 12.50 | 25000 | 6000+ GST |
| 3. | வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்7ல் காளிஷ்வரிமில் வீதியில் வடிகால் அமைத்தல் | 8.85 | 17700 | 1500+ GST |
| **பொது நிதி 2022–2023** | | | | |
| 1. | வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட 16 வது வார்டு கார்டு முத்துசாமி செட்டியார் வீதியில் இரண்டு HDPE தண்ணீர் தொட்டி அமைத்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் மற்றும்17வதுவார்டு பழனிகவுண்டர் வீதியில் ஒரு HDPE தண்ணீர் தொட்டி அமைத்தல் | 2.70 | 5400 | 750+ GST |

## நிபந்தனைகள்

1.மதிப்பீட்டுத்தொகை ரூ. 5.00 லட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

இணையதள முகவரி : , **http://townpanchayats.tn.gov.in/tender** ,
https://tenders.gov.in

2) மதிப்பீடு தொகைக்கு 2% ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை செலுத்தப்பட வேண்டும்

3) ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு பின்பே முடிவு செய்யப்படும்
4) செயல் அலுவலரின் முடிவே இறுதியானதாகும்
5) ஒப்பந்தபுள்ளி ஒப்புக் கொள்ளப்பட்ட மூன்று தினங்களுக்குள் ரூ. 20.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப் பத்திரம் எழுதி செயல் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்
6) ஒப்பந்ததாரர்கள் செய்யப்படும் வேலைகளும், சப்ளை செய்யப்படும் சாமான்களும் விதிமுறைப்படி /சம்மந்தப்பட்ட உதவிப் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் ஆகியோர்களின் அளவுகள் மற்றும் மேல் அளவுகள் செய்யப்பட்ட பின்னரே உரிய தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
7) ஒப்பந்தபுள்ளி யாதொரு காரணமும் காட்டாமல் ஏற்றுக் கொள்ளவோ, தள்ளுபடி செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு
8) ஒப்பந்ததாரர்கள் அவரவர் சமர்ப்பித்துள்ள சொத்து மதிப்பிற்கு உட்பட்ட தொகைகளுக்கு மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

(ஒம்)/—தலைவர்
வேட்டைக்காரன்புதூர்பேரூராட்சி
வேட்டைக்காரன்புதூர்

(ஒம்)/—செயல்அலுவலர்
வேட்டைக்காரன்புதூர்பேரூராட்சி
வேட்டைக்காரன்புதூர்

/உண்மை நகல்/

Sri Kala S.

செயல் அலுவலர்
வேட்டைக்காரன்புதூர்பேரூராட்சி
வேட்டைக்காரன்புதூர்